தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

25.11.2012 P.M

26.11.2012 A.M

**ஏக்கருக்கு 106 டன் கரும்பு மகசூல் : பேரங்கியூர் விவசாயி சாதனை**



திருவெண்ணை நல்லூர் அருகே ஒரு ஏக்கரில் 106 டன் கரும்பு அறுவடை செய்து விவசாயி சாதனை படைத்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரையின் சார்பில் அரசூர் கரும்பு கோட்ட பகுதியான பேரங்கியூரில் முன்னோடி கரும்பு விவசாயி பூராசாமி என்பவரின் வயலில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி மூலம் ஒரு ஏக்கர் பரப்பளவில் 106 டன் அறுவடை செய்துள்ளார்.

அவரை ஆலையின் ஆட்சியர் அன்பரன் மற்றும் விவசாயிகள் பாராட்டினர். விழுப்புரம் மாவட்டம் வேளாண்மை இணை இயக்குநர் சேகர், துணை இயக்குநர் கருணாகரன், கோட்ட புள்ளியியல் அலுவலர் குமரதாஸ், அரசூர் கோட்ட கரும்பு அலுவலர் தங்கமணி, திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி உதவி பேராசிரியர் அன்புமணி, வேளாண் துணை இயக்குநர் ராஜேந்திரன், வேளாண் உதவி இயக்குநர் இளவரசு, புள்ளியியல் வட்ட ஆய்வாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் விவசாயி பூராசாமியின் கரும்பு பயிர் மகசூல் மாநில அளவிலான கணக்கீடு செய்யப்பட்டது. அதில் ஒரு ஏக்கருக்கு 110 டன் கரும்பு பயிர் இருந்தது தெரியவந்தது.

மேலும் போதுமான அளவு மழை இருந்தால் கரும்பு மகசூல் கூடுதலாக எடுக்கலாம் என விவசாயி தெரிவித்தார்.

**காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடிப்பு : 2 நாள்களுக்கு தென்தமிழகத்தில் மழை**

தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடித்து வருவதால் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 2 நாள்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் தென் கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 17-ம் தேதி வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவானது. அந்த தாழ்வு மண்டலம் புயலாக மாறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது வலுவிழந்தது.

காற்றழுத்தத் தாழ்வு நிலையாக வலுவிழந்தபோதிலும் தென்மேற்கு வங்கக் கடலில் கடந்த 3 நாள்களாக நிலை கொண்டிருப்பதால், தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்ததாவது:

காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தென் தமிழகம் மற்றும் தென் கடலோரப் பகுதிகளில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

மணிமுத்தாறு - 140; தென்காசி - 120; திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் மணியாச்சி - 60; புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் - 50; தூத்துக்குடி, பெரியாறு அணை, திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் - 40; ஸ்ரீவைகுண்டம், மதுரை மாவட்டம் மேலூர், காரைக்குடி, தேனி மாவட்டம் உத்தமபாளையம், அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை - 30.

## சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 10 அடி உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 10.17 அடியும், கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் தலா 3 அடியும் உயர்ந்துள்ளது. பாபநாசம் அணையில் அதிகபட்சம் 150 மி.மீ. மழை பெய்துள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் பிசானப் பருவ சாகுபடிப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில் சில நாள்களாக மழை இல்லை. இந்தப் பருவமும் பொய்த்து விடுமோ என அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது. இந்த நிலையில் சனிக்கிழமை திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை பெய்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை: பாபநாசம் அணையில் அதிகபட்சம் 150 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 113 மி.மீ., சேர்வலாறு அணையில் 110 மி.மீ., மணிமுத்தாறு அணையில் 139.2 மி.மீ., கடனாநதி அணையில் 34 மி.மீ., ராமநதி அணையில் 10 மி.மீ, அம்பாசமுத்திரத்தில் 25.3 மி.மீ., சேரன்மகாதேவியில் 39 மி.மீ.

நீர்வரத்து கணிசமாக அதிகரிப்பு: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையினால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2237.37 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 496 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 280 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 145.69 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

சேர்வலாறு அணை 10 அடி உயர்வு: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 1.25 அடி உயர்ந்து 71.80 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 10.17 அடி உயர்ந்து 85.46 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 0.80 அடி உயர்ந்து 63.70 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 70.00 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 70 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணையில் இருந்து 600 கனஅடியும், கடனாநதி அணையில் இருந்து 30 கனஅடியும், ராமநதி அணையில் இருந்து 45 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்ததால் அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

25th nov 2012 P.M

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 790 பேருக்கு காசோலை தயார்

தஞ்சாவூர் வட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உதவித்தொகை வழங்குவதற்காக 790 பயனாளிகளுக்குக் காசோலை தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் வட்டத்தில் உழவர் அட்டை பெற்ற பயனாளிகளான விவசாயிகளின் குடும்ப உறுப்பினர்களில் இயற்கை மரண நிவாரண உதவித்தொகை, திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை வழங்கக் கோரி நிகழாண்டு ஏப். 1-ம் தேதி முதல் நவ. 14-ம் தேதி வரை விண்ணப்பங்கள் வந்தன.

இந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, நிவாரணத் தொகை, கல்வி உதவித்தொகைகளை வழங்க ஒப்பளிப்பு செய்து, ஆணையிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து, இப்போது, கல்லூரி மாணவ, மாணவிகள், விவசாயிகள் என மொத்தம் 790 பயனாளிகளுக்கு வழங்க காசோலை தயார் நிலையில் உள்ளது.

எனவே,இந்தப் பயனாளிகளில் காசோலை பெறாதவர்கள் தங்களது அசல் குடும்ப அட்டை, உழவர் அட்டையுடன் தஞ்சாவூர் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

கல்வி உதவித்தொகை பெறும் மாணவ, மாணவிகள் மட்டும் அசல் குடும்ப அட்டை, உழவர் அட்டை, கல்லூரியில் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் நேரில் வர வேண்டும்.

## குளித்தலையில் நவ. 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நவ. 28-ம் தேதி குளித்தலையில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாத, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் குளித்தலை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நவ. 28 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது.

நிகழச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகிக்கிறார். கரூர் மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் உயிர் உரங்கள் விநியோகம்

நிலக்கடலை மகசூலைப் பெருக்க மானிய விலையில் உயிர் உரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது

இதுகுறித்து எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளிதரன் கூறியது:

கார்த்திகை பட்ட நிலக்கடலை விதைப்பு எலச்சிபாளையம் பகுதியில் துவங்கியுள்ளது. நிலக்கடலை பயிரின் விளைச்சலைப் பெருக்க, உயிர் உரங்கள் துணை செய்யும். நிலக்கடலை விதைகளை ரைசோபியம் மற்றும் பாஸ்போபேக்டீரியா என்ற உயிர் உரங்களைக் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதன் மூலம், காற்றிலுள்ள தழைச்சத்து உரம் கிரகிக்கப்பட்டு வேர் மண்டலத்தில் வேர் முடிச்சுகளில் சேமிக்கப்படும். மண்ணில் கிட்டா நிலையில் இருக்கும் மணிச்சத்து உரம் கிடைக்கும் நிலைக்கு மாற்றித் தரப்படும். உயிர் உரம் விதை நேர்த்தி செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு 3 பொட்டலங்கள் தேவைப்படும். நிலக்கடலை விதைக்கும் போது வயலுக்கு உயிர் உரங்கள் மக்கின குப்பையுடன் கலந்து இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 பொட்டலங்கள் தேவை. நிலக்கடலை விதைப்புக்கு முன் உயிர் உரங்களை தொழு உரத்துடன் கலந்து மேலாக இட வேண்டும்.

எலச்சிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் தற்போது உயிர் உர பாக்கெட்டுகள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 13 பொட்டலங்கள் என்ற அளவில் பாதி விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதனை விவசாயிகள் பயன்படுத்தி நிலக்கடலை மகசூலைப் பெருக்கிட வேண்டும் என்றார் அவர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கு அறுவடை பின்சார் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமில் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, மஞ்சள், மா பயிரிட்ட விவசாயிகளுக்கு மேற்கொள்ள வேண்டிய பின்செய் நேர்த்தி முறைகளையும், அதனால் கூடுதல் லாபம் கிடைப்பது

குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் நன்மைகள், கட்டமைப்பு வசதிகள், மானியங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டன.

வேளாண் விற்பனைக் குழுச் செயலாளர் பொ.முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர் பழனி ஆகியோர் பங்கேற்றனர்.

**ராபி பருவ முனைப்பு இயக்கம்**

மாதனூர் வட்டார வேளாண்மை துறை சார்பில் பெரியாங்குப்பம் ஊராட்சியில் ராபி பருவ முனைப்பு இயக்கம் அண்மையில் நடைபெற்றது.

ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா தங்கராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் டி.ஏ. பாபு ரவிவர்மன், ராபி பருவத்தில் கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். வேளாண் அலுவலர் ஏ.ராதா, துணை வேளாண் அலுவலர் மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மாவட்டத்தில் பரவலாக கன மழை : சோத்துப்பாறையில் 16.8 செ.மீ.,மழை பதிவு**

தேனி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு பரவலாக கன மழை பெய்தது. சோத்துப்பாறையில் அதிக அளவாக 16.8 செ.மீ.,மழை பதிவாகி உள்ளது.

மாவட்டத்தில் கடந்த 2011, அக்.28-ம் தேதி உத்தமபாளையத்தில் அதிக அளவு 9.5 செ.மீ.,மழை பெய்தது. கடந்த அக்.8-ம் தேதி பெரியகுளத்தில் 9.5 செ.மீ., சோத்துப்பாறையில் 8.8 செ.மீ., அக்.11 தேதி போடியில் 5.4 செ.மீ., மழை பெய்தது. வெள்ளிக்கிழமை பிற்பகல் மாவட்டத்தில் பரவலாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டு, இரவில் கன மழை பெய்தது. சனிக்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும், மழை பொழிவு இல்லை.

மழையளவு (செ.மீ.,): பெரியகுளம்-4, வைகைஅணை-4, மஞ்சளாறு-2.7, ஆண்டிபட்டி-4.2, தேனி-4.4, வீரபாண்டி-6.5, போடி-6.8, உத்தமபாளையம்- 1.6, கூடலூர்-1. பெரியாறு அணை நீர் பிடிப்பில் 1.2, தேக்கடியில் 1.4 செ.மீ.,மழை பதிவாகியுள்ளது. போடி மெட்டு மலைப் பகுதியில் பெய்த கன மழையால் கொட்டகுடி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வைகை அணை நீர்மட்டம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 54.6 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 694 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 1,460 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

**நத்தத்தில் பலத்த மழை**

திண்டுக்கல் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்துள்ளது. சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம்.

திண்டுக்கல் 29.5 மிமீ., கொடைக்கானல் 27.5, நத்தம் 38, நிலக்கோட்டை 11.6, சத்திரப்பட்டி 4, வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சி மையம் 2.2, காமாட்சிபுரம் 8.8, கொடைக்கானல் போட் கிளப் 23.5, பழனி மற்றும் வேடசந்தூரில் மழை ஏதும் பதிவாகவில்லை.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

25.11.2012 P.M

26.11.2012 A.M

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.20 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 600 மூட்டை மஞ்சள், 20 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், நேற்று முன்தினம், மஞ்சள் ஏலம் நடந்தது.

ஏலத்துக்கு, கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, நையினார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி ஆகிய பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,113 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,499 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,012 ரூபாய்க்கும், அதிகபட்சம், 5,269 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 9,006 ரூபாய்க்கும், அதிகபட்சம், 12 ஆயிரம் ரூபாய்க்கும் விற்றது.

இரண்டு வாரங்களாக, மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், குவிண்டாலுக்கு விரலி மஞ்சள், 520 ரூபாய், உருண்டை மஞ்சள், 220 ரூபாய், பனங்காலி மஞ்சள், 1,666 ரூபாய் விலை குறைந்தது. ஏலத்தில், 600 மூட்டை மஞ்சள், 20 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் சேவை சங்க ஆலோசனை கூட்டம்

நாமக்கல்: மாவட்ட மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் நலச்சேவை சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், நாமக்கல்லில் நடந்தது.

நிறுவனத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். செயலாளர் தில்லை சிவக்குமார் வரவேற்றார். பெருந்துறை கணேசமூர்த்தி, மலை வேம்பு வளர்ப்பு முறை பற்றியும், புதுக்கோட்டை அங்குராஜ், மரச்சாகுபடி குறித்தும், முரளிதரன், வனசாஸ்திரம் பற்றியும் விளக்கிப் பேசினர்.

மரம் மற்றும் மூலிகைச் செடிகளை வளர்ப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள், நமக்கு கிடைக்கும் மருத்துவ குணங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மரம் வளர்ப்பதால், மழை வளம் பெறுவதுடன், சுத்தமான காற்றை சுவாசிக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் முடியும் என்பதை

அறிவுறுத்தப்பட்டது.
அதேபோல், மரம் மற்றும் மூலிகை வளர்ப்பில், அரசு செயல்படுத்தி உள்ள நலத்திட்டங்கள், மானிய திட்டங்கள், வங்கிகள் மூலம் கிடைக்கும் கடன் வகைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.
அரசு புறம்போக்கு நிலம், கோவில் தரிசு நிலம் ஆகியவற்றில் மண்ணுக்கு ஏற்ப மர வகைகளை நடவு செய்து, நாமக்கல் மாவட்டத்தில், 33 சதவீதம் பசுமை போர்வை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், இயற்கை ஆர்வலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.
ஏற்பாடுகளை, மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் நலச்சேவை சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

## விளை பொருட்க ளை மதிப்பூட்டினால் அதிக லாபம் : உதவி இயக்குனர் தகவல்

தர்மபுரி: ""விவசாயிகள் விளை பொருட்களை, மதிப்பூட்ட பொருள்களாக மாற்றுவதன் மூலம் அதிக லாபம் பெறலாம்," என தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரிய கோவை வேளாண்மை உதவி இயக்குனர் அல்தாப் தெரிவித்தார்.
தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் சார்பாக, விசாயிகளுக்கு அறுவடை பின்சார் தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரிய கோவை வேளாண்மை உதவி இயக்குனர் அல்தாப் பேசியதாவது: விவசாயிகள் தங்களது நிலத்தில் விளையும் பொருட்களை, நேரடியாக சந்தை படுத்தாமல், மதிப்பு கூட்டிய பொருட்களாக மாற்றி சந்தை படுத்துவதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கும். வளர்ந்த நாடுகளில் விவசாயிகள், 40 முதல், 80 சதவீதம் மதிப்பு கூட்டிய பொருட்களாக வணிக ரீதியாக தயாரிக்கின்றனர்.
நம் நாட்டில் அனைத்து தொழில்நுட்ப வசதிகள் இருந்தும் வேளாண் விளை பொருட்களில் இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள், இரண்டு சதவீதத்தில் இருந்து, ஏழு சதவீதம் மட்டும் தயாரிக்கின்றனர். இதற்கு காரணம், மதிப்பூட்டப்படுதல் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகளுக்கு இல்லாததே காரணம்.
நெல், மக்காசோளம், நிலக்கடைலை, மஞ்சள், மா பயிரிட்டுள்ள விவசாயிகள் மேற்கொள்ள வேண்டி பின்செய் நேர்த்திமுறைகள் மூலம் மதிப்பு கூட்டுதல் பொருட்களாக நெல்லில் இருந்து அரிசி, தவிடு, உமி, மக்காசோளத்தில் இருந்து ஸ்வீட்கார்ன், பேபிகார்ன், ஸ்டார்ச் மற்றும் மருந்து பொருட்கள் தாயாரிப்பு, நிலக்கடலையில் எண்ணெய், புண்ணாக்கு பர்பி வகைகள் மஞ்சளில் இருந்து மஞ்சள் தூள், மஞ்சள் பவுடர் மருந்து பொருட்கள், அழகுசாதன பெருட்களாக மாற்றுவதால் அதிக லாபம் கிடைக்கும்.
பயிர் வாரியாக விளைபொருள் குழுக்கள் அமைப்பது, சந்தைக்கு ஏற்ப பயிர் சாகுபடி செய்வதால் கிடைக்கும் பயன்கள் குறித்து, அவர் பேசினார். ஒழுங்குமுறை கூடத்தின் நன்மைகள், கட்டமைப்பு

வசதிகள், குளிர்பதன வசதி மேற்கொள்ளப்படவுள்ளது குறித்து விற்பனை குழு செயலாளர் முருகேசன் பேசினார். உழவர் சந்தையின் காய்கறி தேவை வரத்து, நன்மைகள், விவசாயிகள் அடையாள அட்டை பெறுவது குறித்து உதவி வேளாண்மை அலுவலர் பழனி பேசினார்.

**நெல்லை மாவட்டத்தில் தொடர்மழை அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

விக்கிரமசிங்கபுரம்:காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக பாபநாசம் அணைக்கு நீரின் வரத்து அதிகரித்துள்ளது.நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், பாபநாசம் கீழ் அணை, சேர்வலாறு மற்றும் காரையாறில் பலத்த மழை பெய்தது.காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக பாபநாசம் அணைக்கு நேற்று விநாடிக்கு 2 ஆயிரத்து 237.36 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1704.75 கனஅடி நீர் வெளியேறியது. பாபநாசம் அணையில் 150 மி.மீ., அளவு மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினத்தை விட சுமார் ஒன்றரை அடி அதிகரித்து, நேற்று காலை நிலவரப்படி 71.80 அடியாக இருந்தது.பாபநாசம் கீழணையில் 113 மி.மீ. சேர்வலாறு பகுதியில் 110 மி.மீ, மணிமுத்தாறில் 139.2 மி.மீ, அம்பையில் 25.3 மி.மீ, சேரன்மகாதேவியில் 39 மி.மீ என்ற அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது.சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 75.20 அடியாக இருந்தது. மழையின் காரணமாக இந்த அணைக்கு அதிகளவு தண்ணீர் வந்ததால் நேற்று அணையின் நீர்ட்டம் சுமார் 10 அடி உயர்ந்து, 85.46 அடியாக உயர்ந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 63.70 அடியாகவும் இருந்தது.

**சம்பா சாகுபடி பாதிப்பு விவசாயி தற்கொலை**

திருத்துறைப்பூண்டி: வட்டிக்கு கடன் வாங்கி, சாகுபடி செய்த சம்பா பயிரை காப்பாற்ற முடியாத கவலையில், விவசாயி ஒருவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

நாகை மாவட்டம், கீழ்வேளூர் தாலுகா கூவெட்டான்குடியை சேர்ந்தவர் ராஜாங்கம், 35. இவருக்கு சொந்தமான, ஆறு ஏக்கர் நிலத்தில், சம்பா நெற்பயிர் சாகுபடி செய்திருந்தார். இந்நிலையில், நேற்று மதியம் வீட்டில் விஷம் குடித்து, ராஜாங்கம் இறந்து கிடந்தார்.

அக்கம்பக்கத்தினர், வலிவலம் போலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற போலீஸார், விவசாயி உடலை கைப்பற்றி, திருவாரூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

காவிரி ஆற்றில் தண்ணீர் வராததாலும், போதுமான மழை பெய்யாததாலும் டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி பாதித்துள்ளது. அதனால், "வட்டிக்கு கடன் வாங்கி சாகுபடி செய்த நெற்பயிரை காப்பாற்ற முடியவில்லையே' என்ற கவலையில் ராஜாங்கம் தற்கொலை செய்ததாக கூறப்படுகிறது.

தகவலறிந்த காவிரி விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் சேரன், பொதுச்செயலாளர் தனபாலன்,

நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் உள்பட சுற்றுவட்டார விவசாயிகள் நூற்றுக்கணக்கானோர், ராஜாங்கம் வீட்டின் முன் திரண்டனர்.

## சம்பா பயிர் இன்ஸ்சூரன்ஸ்செய்ய டிச.,15 வரை வாய்ப்பு

சிவகங்கை:""சம்பா பயிருக்கு காப்பீடு திட்டத்தில், டிச.,15ம் தேதி வரை விவசாயிகள் சேரலாம்," என, விவசாய இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி மண்டல மேலாளர் பாரதிவஜ்ஜிரவேலு தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் கடந்த ஆண்டு தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் மூலம், நெல் பயிருக்கு 60 சதவீத இன்சூரன்ஸ் தொகை வழங்கப்பட்டன. நடப்பாண்டு சம்பா நெல் சாகுபடி பயிர், இன்ஸ்சூரன்ஸ் செய்ய, டிச.,15 வரை கால அவகாசம் உண்டு. ஏக்கருக்கு, ரூ.5,107க்கு, பிரீமியம் ரூ.276; ரூ.5,837 பெற பிரீமியம் ரூ.788 செலுத்தவேண்டும். சிட்டா, அடங்கல் மற்றும் வி.ஏ.ஓ., முன்மொழிவு படித்துடன் வங்கி அல்லது முகவரிடம் பணத்தை செலுத்தி ரசீது பெறலாம்," என்றார்.

## அட்மா திட்ட பயிற்சி

விருதுநகர்:அட்மா திட்டத்தின் கீழ் இயற்கை பண்ணைய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி ராஜபாளையத்தில் நடந்தது. @வளாண்மை துணை இயக்குனர் செண்பகராஜ், முனைவர் ஆறுமுகம், @வளாண்மை உதவி இயக்குனர் பன்னீர் öŒல்வம், ஆகி@யார் சாகுபடி தொழில் நுட்பம், பஞ்ச கவ்யம் தயாரித்தல், மண்புழு உரமிடுதல், குறித்து @பசினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை @வளாண் அலுவலர் ”சுந்தரவள்ளி செய்தார்.

## தரமான விதைகளை பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள்

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கார்த்திகை பட்டத்தில் சிறுதானிய பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்' என்று கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கார்த்திகை பட்டத்தில் இறவை சாகுபடிக்கு உகந்த சிறுதானிய பயிரான ராகி மற்றும் எண்ணைய் வித்து பயிர்களான நிலக்கடலை, சூரிய காந்தி பயிர்களின் விதைகள் தரமானதுதானா என விவசாயிகள் அறிந்து சாகுபடி மேற்கொள்ள வேண்டும். விதைகளை வாங்கும் முன், அந்த விதை குவியல்களுக்கு முளைப்புத்திறன் பகுப்பாய்வு அறிக்கையை கேட்டு சரிபார்க்கவும்.

விதைகளின் தரம் தரம் பற்றி அறிந்து கொள்ள, கிருஷ்ணகிரி நகரில் மோகன்ராவ் காலனி, முதல் குறுக்கு தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதிலும் இருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள் , ஆய்வாளர்

விதை மாதிரிகள், பணிவிதை மாதிரிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பரிசோதனை முடிவுகள் வழங்கப்பட்டு வருகிறது.
இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி அனைத்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள், ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தை அறிந்து, தரமான விதைகளை பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ள வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உணவு பதப்படுத்தும் திட்டம் ரூ.10 கோடி வரை மானியம்**

ஈரோடு: ஈரோடு மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உணவு பதப்படுத்தும் திட்டத்தில் தொழில் முனைவோருக்கான நிதி மானியம் குறித்த விளக்க கூட்டம், ஈரோட்டில் நடந்தது.வேளாண் அலுவலர் சுமதி கூறியதாவது:மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு இணைந்து, 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் நிதி மானியம், மத்திய அரசு பங்காக, 75 சதவீதம், மாநில அரசு பங்காக, 25 சதவீதம் வழங்கப்படுகிறது.தொழில்நுட்ப மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் ஆகியவற்றுக்கு, கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்துக்கு, 25 சதவீதம், அதிகப்பட்சமாக, 50 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்ற வசதிகளை தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களுக்கு, கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்துக்கு, 50 சதவீதம், அதிகப்பட்சமாக பத்து கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.மனித வள மேம்பாட்டு திட்டங்களில், உணவு பதப்படுத்தும் தொழில் நுட்பம் தொடர்பான பட்டம், பட்டயப்படிப்புக்கான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு, புத்தகங்கள், பரிசோதனை கூட கருவிகள் போன்றவற்றுக்கு அதிகப்படசமாக, 75 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்க, ஒரு பயிற்சிக்கு இரண்டு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு, ஒரு பொருள் பயிற்சி, அதிகப்பட்சமாக நான்கு லட்சம் ரூபாய் நிலையான முதலீட்டுக்கும் மற்றும் இரண்டு லட்சம் ரூபாய் சுழற்சி முதலீட்டுக்கும் வழங்கப்படுகிறது. பல பொருள் பயிற்சிக்கு அதிகப்பட்சமாக, 11 லட்சம் ரூபாய் நிலையான முதலீட்டுக்கும், நான்கு லட்சம் ரூபாய் சுழற்சி முதலீட்டுக்கும் மானியமாக வழங்கப்படுகிறது.விளம்பரம் மூலம் மேம்பாட்டு திட்டத்தில், கருத்தரங்கு மற்றும் பணிமனை கூட்டத்துக்கு திட்ட மதிப்பில், 50 சதவீதம், அதிகப்பட்சமாக மூன்று லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். படிப்பு மற்றும் கணக்கெடுப்புக்கு திட்ட மதிப்பில், 50 சதவீதம்,

அதிகப்பட்சமாக மூன்று லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சி திட்டத்துக்கு ஏற்றவாறு நிதி உதவி வழங்கப்படும்.இத்திட்டத்தின் கீழ் மானியம் கோருவோர், விண்ணப்பங்களை வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) மூலமாக மாநில தேசிய உணவு பதப்படுத்தும் திட்ட இயக்குனருக்கு அனுப்பலாம். மேலும் விபரங்களுக்கு வேளாண் வணிகம் துணை இயக்குனரை அணுகலாம்.
இவ்வாறு அவர் கூறினார்.முன்னதாக மாவட்ட தொழில்மைய உதவி பொறியாளர் திருமுருகன், திட்டம் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம்,வேளாண் அலுவலர் (அக்மார்க்) சீனிவாசன், அரிசி ஆலை உரிமையாளர்கள் சம்மேளன ஆலோசகர் ஜெகதீசன், ஈரோடு மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க தலைவர் ஆறுமுகம், செயலாளர் கந்தசாமி, பொருளாளர் கருப்புசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## தென்னையில் ஈரியோபைட் சிலந்தி தாக்குதல் :உற்பத்தி , சத்து மற்றும் எண்ணெய் பாதிப்பு

கோபிசெட்டிபாளையம்: பாசனத்தில் தண்ணீர் பற்றாக்குறையால், தென்னை சாகுபடிக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர். ஈரியோபைட் சிலந்தி தாக்குதலால், 30 சதவீதம் தேங்காய் மகசூல் இழப்பு ஏற்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.
தமிழகத்தில், 3.83 லட்சம் எக்டேரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. 467 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேசிய அளவில் தமிழகத்தில், 20 சதவீத பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டு, 34 சதவீத தேங்காய் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழகத்தில் தென்னை காய்ப்புத்திறன் ஒரு எக்டேருக்கு ஆண்டுக்கு, 12 ஆயிரத்து, 959 தேய்காயாக உள்ளது.
உலக அளவில் தென்னை மரங்களை, 547 வகை பூச்சிகள் தாக்குகின்றன. 1998ம் ஆண்டில் "ஆசரியா கெர்ரரோனிஸ்' என்று அழைக்கப்படும் ஈரியோபைட் சிலந்தி பூச்சி தமிழகத்தில் முதன் முதலான தோன்றியது. கடந்த, 2000ம் ஆண்டு இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் நடத்திய ஆய்வில் தமிழகத்தில், 44 சதவீதம் தென்னைகளில் இந்த சிலந்தியின் தாக்குதலால் தேங்காய் சேதமாவது கண்டுபிடிக்கப்பட்டது. 30 சதவீத தேங்காய் மகசூல் பாதிக்கிறது.
நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்ததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று நீர் பாசனம் மூலம் நெல், வாழை, கரும்பு போன்றவை பயிரிடப்பட்டுள்ளது. தென்னைக்கு நீரின் அளவு தேவை குறைவு என்பதால் ஈரோடு மாவட்டத்தில் தென்னை வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.
வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி கூறியதாவது:
இம்மாவட்டத்தில் நீர் பற்றாக்குறையால், தென்னை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர். தென்னையில் ஊடுபயிராக மஞ்சள், வாழை பயிரிடலாம். தென்னையின் மூலம் ஆண்டுக்கு, 50 முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெற முடியும். தென்னையை

ஈரியோபைட் சிலந்தி தாக்கிவிடுகிறது.
இச்சிலந்தி மிகச்சிறிய பூச்சி. வாய் உறுப்பு கடித்து மென்று தின்னும் வகையிலும், உறிஞ்சும் வகையிலும் இருக்கும். இப்பூச்சிகள், 2 முதல், 6 மாத வளர்ச்சியுள்ள இளங்குரும்பைகளில் காணப்படும். இவை தாக்குவதால் தேங்காய் பருப்பின் அளவு, 30 சதவீதம் வரை குறைந்து விடும். தாக்கப்பட்ட காய்களின் உரிமட்டை, நாரின் தரம் குறையும்.
இச்சிலந்தி தாக்கிய இளநீர், பருப்பின் சர்க்கரை சத்து அளவு குறையும். இத்தேங்காயில், பெராக்ஸிடேஸ் என்ற நொதியின் அளவு மூன்று மடங்கு அதிகமாகி, அத்தேங்காயில் இருந்து எடுக்கும் எண்ணெய் விரைவில் கெட்டு விடும். இத்தேங்காய்களில் அமிலத்தன்மை குறைவாக இருக்கும். இப்பூச்சி தாக்குதலால், தமிழகத்தில் கொப்பரை தேங்காய் உற்பத்தி, 10 முதல், 35 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் தேங்காய் மகசூலில், 17 சதவீதம், தேங்காய் எடையில், 37 சதவீதம், சந்தை விலையில் 44 சதவீதம், 3வது மற்றும் 4வது தர தேங்காய் எண்ணிக்கை 46 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இச்சிலந்தி தாக்கிய விதையில் முளைக்கும் தென்னங்கன்றுகளின் வீரியத்தன்மை குறைந்து காணப்படும். நீள் உருண்டை வடிவம், முக்கோண வடிவம் கொண்டை தேங்காய்களை விட நல்ல முழு உண்டை வடிவம் கொண்ட தேங்காய்களில் சிலந்தி தாக்குதல் குறைவாக காணப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.45 வரை சி.வெங்காயம் விலை உயர்வு :இருப்பு வைத்த விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு: தமிழகத்தில் சின்ன வெங்காயம் வரத்து குறைந்து, ஏற்றுமதி தேவை அதிகரிப்பால் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது, என வணிகர்கள் தெரிவிக்கின்றனர்.
ஈரோடு, நாமக்கல், விருதுநகர், திருச்சி, திருப்பத்தூர், திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, பெரம்பலூர் மற்றும் கோவை ஆகியவை பகுதியில் சின்னவெங்காயம் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.
கடந்த, 2011 - 2012ம் ஆண்டு சின்ன வெங்காயம், 22,700 எக்டர் பரப்பில், மூன்று லட்சத்து, 33 ஆயிரத்து, 870 டன் உற்பத்தியாக இருந்தது. பெல்லாரி வெங்காயத்தில், 30 சதவீதம் விதையிடப்பட்டது. இந்த ரக வெங்காயம் இருப்பு வைத்தால், அதன் தரம் குறைந்துவிடும். தற்போது, திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து பெல்லாரி வெங்காயம் வரத்தாகிறது.
மேலும், திருப்பத்தூர், திருச்சி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து சின்ன வெங்காயம் மண்டிக்கு வருகிறது. கர்நாடகாவில் நிலவும் விலையால், தமிழகத்தில் விலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. கர்நாடகாவில் இருந்து, தமிழகத்துக்கு வரத்து கணிசமாக குறைந்து விட்டது. கடந்த சில மாதத்துக்கு முன், சின்ன வெங்காயம் கிலோ, 24 ரூபாய்க்கு விற்கப்பட்டது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆராய்ந்து, வெங்காயம் இருப்பு வைத்து விற்பனை செய்தால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிட்டும் என அண்மையில் தெரிவித்தது.

அதன்படி, விவசாயிகள் பலரும், வீடுகளிலும், குடோன்களிலும் இருப்பு வைக்க துவங்கினர். தற்போது மண்டிகளுக்கு வரத்து குறைந்து, தேவை அதிகரித்துள்ளன. மேலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரித்துள்ளதால், விலையும் தாறுமாறாக உயர்ந்து வருகிறது என வணிகர்கள் தெரிவிக்கின்றனர்.

வெங்காய மண்டி உரிமையாளர் இமாமுதீன் கூறியதாவது:

தமிழகத்தில் திருநெல்வேலி, பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோவை, திருப்பத்தூர் ஆகிய பகுதியில் இருந்து சின்ன வெங்காயம் வரத்தாகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து பெல்லாரி ரக வெங்காயம் வரத்தாகிறது.

சென்றாண்டு, உற்பத்தி இரட்டிப்பால், நடப்பாண்டு சின்ன வெங்காயம் கிலோ, 14 முதல் அதிகபட்சம், 24 ரூபாய் வரை உயர்ந்தது. இதனால், சாகுபடி பரப்பை குறைந்து, உற்பத்தி செய்த வெங்காயத்தை விலையை எதிர்பார்த்து இருப்பு வைத்தனர். கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு வரத்தும் கணிசமாக குறைந்து விட்டது.

வரத்து குறைந்த நிலையில், இலங்கை, பிலிப்பைன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் விலையும் கிலோவுக்கு, 25 ரூபாய் வரை உயர்ந்து விட்டது. மண்டியில் சின்ன வெங்காயம் கிலோ, 43 முதல், 47 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பனி பொழிவு அதிகம், வடகிழக்கு பருவமழை காரணமாக விவசாயிகள் இருப்பு வைத்த வெங்காயத்தை விற்பனை செய்து வருகின்றனர். விலையை எதிர்பார்த்து, இருப்பு வைத்த விவசாயிகளுக்கு நல்ல லாபம் பெறுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## மண் அரிப்புக்கு காரணமான வடிகால்களின் ஆய்வு அவசியம் '

ஊட்டி:"விவசாய நிலங்களில் மண் அரிப்புக்கு காரணமாக அமையும், மழைக்கோடு போன்ற வடிகால்கள் (ரில்) ஏற்படுவதற்கான காரணம் குறித்து ஆராய வேண்டும்,' என, மத்திய மண் வள ஆராய்ச்சி மைய இயக்குனர் அறிவுறுத்தியுள்ளார்.ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் சார்பில், விவசாய நிலம் மற்றும் தோட்டங்களில் மண்ணரிப்பு, நிலச்சரிவு ஏற்படுவதை தடுக்க, நிலங்களில் சணல் வலைகளை பொருத்தி, ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 2009ல், நீலகிரியில் பெய்த புயல் மழையில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேத்தி கெரையாடா பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் சணல் வலைகள் பொருத்தப்பட்டு, ஆராய்ச்சி அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மையங்களின் இயக்குனர் டாக்டர் மிஸ்ரா, ஊட்டியில் உள்ள மைய செயல்பாடுகளை ஆய்வு செய்தார். மைய விஞ்ஞானிகளிடம் இயக்குனர் டாக்டர் மிஸ்ரா கூறியதாவது:

மண் அரிப்பு, நிலச்சரிவு ஏற்படக் கூடிய விவசாய நிலம், தோட்டங்களில் சணல் வலைகளை

பயன்படுத்தும் திட்டம் மிகச் சிறந்த பலனை கொடுக்கும்.
மழை காலங்களில் விவசாய நிலம், தோட்டங்களில் வழிந்தோடி செல்லும் மழை நீரால், நிலங்களில் வடிகால் (ரில்) ஏற்பட்டு, அதில் மழைநீர் வழிந்தோடும்; பெருமழை சமயங்களில் பெரிய அளவிலான வடிகால் உருவாகி, அந்நிலம் முழுவதும் அடித்து செல்லும் வாய்ப்பும் ஏற்படும். சணல் வலை பொருத்தப்பட்ட மற்றும் பொருத்தப்படாத நிலம், தோட்டங்களில், அவ்வப்போது பெய்யும் மழையின் அடர்த்தியை அடிப்படையாக வைத்து, அந்நிலங்களில் ஏற்படும் வடிகால்களின் தன்மையை ஆய்வு செய்ய வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.ஊட்டி மைய தலைவர் டாக்டர் கோலா, முதுநிலை விஞ்ஞானி மணிவண்ணன் உட்பட மைய விஞ்ஞானிகள் உடனிருந்தனர்.

**நிதி ஒதுக்கீடு !ண விவசாய பொருட்களை மானிய த்தில் வழங்க ... மலை பகுதி மேம்பாட்டு திட்டத்தில் நடவடிக்கை**

ஊட்டி:நீலகிரியில், எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ், தோட்டக்கலை துறை மூலம் விவசாய இடுபொருட்களை மானிய விலையில் வழங்க 27 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
ஊட்டி, தோட்டக்கலை இணை இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:இந்தாண்டு நீலகிரியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உதவ, தோட்டக்கலை துறைக்கு, எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு 178.85 லட்சம், இதர நீர் பிடிப்பு பகுதிகளுக்கு 96.90 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் பல வகை காய்கறி விதைகள், பண்ணை இயந்திரங்கள், கை தெளிப்பான், ஆயில் இன்ஜின், தேயிலை, மிளகு செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கான திட்டங்கள் குழு அமைத்துள்ள (கிளஸ்டர்) சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில், உயர் ரக விளைச்சல் தரும் காய்கறி விதைகள் பயிரிட, அதிகபட்சம் ஒரு ஹெக்டருக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது. மொத்தம் 480 ஹெக்டர் மானியம் வழங்கப்படும். சிறு, குறு விவசாயிகளுக்கு ஆயில் இன்ஜின் வாங்க மானியமாக 7,500 ரூபாய் வழங்கப்படும்; மொத்தம் 180 விவசாயிகளுக்கு 18.50 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது."பவர் டில்லர்' இயந்திரம் வாங்க 40 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்; மொத்தம் 18 விவசாயிகளுக்கு 7.20 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது. 25 சதவீத மானியத்தில் ஒரு கை தெளிப்பானுக்கு 500 வீதம் மானியம் வழங்கப்படும்; மொத்தம் 180 கை தெளிப்பான்களுக்கு 90 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது.முள், மண்வெட்டி, கத்தி,பிற பண்ணை உபகரணங்களை 25 சதவீத மானிய விலையில் வழங்க 12 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தவிர, 50 சதவீத மானியத்தில், தேயிலை தோட்டங்களில் இடை நடவு செய்ய ஒரு ஹெக்டருக்கு அதிகபட்சம் 3,500 ரூபாய் மதிப்புள்ள தேயிலை செடிகள், 150 ஹெக்டருக்கு வழங்க, 5.25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.பிற நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கான திட்டங்கள்

கிராமங்களில் குழு அமைத்து செயல்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய குழுக்களுக்கு, 50 சதவீத மானியத்தில், அதிகபட்சம் 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் உயர் ரக பட்டாணி, பீன்ஸ், காரட், டர்னிப், நூல்கோல் விதைகள் வழங்கப்படும். மொத்தம் 302.5 ஹெக்டர் பரப்பளவுக்கு 30.25 லட்சம் மதிப்பில் விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம் 120 விவசாயிகள் ஆயில் இன்ஜின் வாங்க 9 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தலா 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது. "பவர் டில்லர்' வாங்க 12 விவசாயிகளுக்கு 4.80 லட்சத்தில், தலா 40 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். கை தெளிப்பான்களுக்கு 8 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில், தலா 500 ரூபாய் வீதம் வழங்கப்படும்.முள், மண்வெட்டி, கத்தி உட்பட பண்ணை கருவிகளுக்கு 25 சதவீத மானியத்தில் 800 விவசாயிகளுக்கு தலா 1,000 வீதம் மானியம் வழங்க, 8 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. தேயிலை தோட்டத்தில் உள்ள இடைவெளியை நிரப்ப 50 சதவீத மானிய விலையில் ஹெக்டருக்கு 2,000 தேயிலை நாற்றுகள் வழங்கப்படவுள்ளன; மொத்தம் 100 ஹெக்டர் பரப்பளவில் 3.50 லட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது. பசுமை புரட்சி திட்டம்மாநில முதல்வரின் இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தை நிறைவேற்ற எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ் பல வகை பண்ணை இடுபொருட்கள் வழங்கப்படவுள்ளதால், பயனடைய விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலை துறை வேளாண்மை உதவி அலுவலர், தோட்டக்கலை அலுவலரை தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.மானியம் பெற விவசாயிகள் பெயரில் சொந்த நிலம் இருக்க வேண்டும். சிறு, குறு, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு வட்டார தலைமை இடங்களில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்கள், தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, மோகன் தெரிவித்துள்ளார்.

## கரும்புக்கு ரூ.5,000 வழங்கஜனவரி 29ல் ஆர்ப்பாட்டம்

திருச்சி: "கரும்பு டன் ஒன்றுக்கு, 5,000 ரூபாய் வழங்கக்கோரி, சென்னையில் ஜனவரி, 29ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்' என, பாரதிய கிஷான் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.பாரதிய கிஷான் சங்கம் சார்பில், மாநில நிர்வாகிகள் கூட்டம் உறையூர், சாதனா மஹாலில் நேற்று நடந்தது. மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு தலைமை வகித்தார். துணைத்தலைவர் ராமமூர்த்தி, கரும்பு விவசாய பிரிவு துஜணத்தலைவர் சேகர், ஒருங்கிணைப்பாளர் பட்டாபி உள்பட பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:"யானை பசிக்கு சோளப்பொரி' போல அனைத்து பொருட்களுக்கும் அதிகபட்ச விலை அறிவிக்கும் மத்திய அரசு, விவசயிகள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு மட்டும் குறைந்தபட்ச ஆதரவு விலையென்று, டன்னுக்கு, 1,450 ரூபாயிலிருந்து, 1,700 ரூபாய் அறிவித்து, கரும்பு விவசாயிகள் வயிற்றில் அடித்துள்ளது.இந்நிலையில், 50 கிலோ பொட்டாஷ் உரத்தை, 231

ரூபாயிலிருந்து, 900 ரூபாய்க்கும், டி.ஏ.பி., உரம், 486 ரூபாயிலிருந்து, 1,400 ரூபாய் என, உரம் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

ஒரு டன் கரும்புக்கு, 5,000 ரூபாய் வழங்க வேண்டும்.
இதை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் டிசம்பர் மாதம் மாவட்ட தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தி, ஜனவரி, 29ம் தேதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தி, 30ம் தேதி சென்னையில் கூடி, டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக முடிவு செய்வது.விவசாயத்துக்கு தனி பட்ஜெட் வேண்டும்' என தமிழக அரசை கேட்டுக்கொள்வது. விவசாய விளை பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கும் வரை, விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.பிரம்மபுத்திரா, கங்கை, யமுனை, மகாநதி, கோதாவரி ஆகிய நதிகளை காவிரியுடன் இணைத்து, தமிழகத்தையும், காவிரி டெல்டா விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும்.60 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து விவசாயம் செய்து, விவசாயம் செய்துள்ள திருச்சி, தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, கடலூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், நாமக்கல், சேலம் மாவட்ட விவசாயிகளை காப்பாற்ற மத்திய அரசு உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் சாகுபடி செய்த பயிர்கள் அழியும் வாய்ப்புள்ளது. எனவே, ஒரு லட்சத்து. 20 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டயீடாக வழங்க வேண்டும்.

## பால் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி

திருச்சி: "பால் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி இன்று நடக்கிறது' என, தமிழ்நாடு கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தலைவர் லூர்து ரீத்தா தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
திருச்சி ராமலிங்க நகர், முதல் மெயின்ரோட்டில் உள்ள கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இன்று காலை, 10 மணியளவில், மதிப்பூட்டிய பால் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி நடக்கிறது. பங்கேற்க விரும்புவோர், இன்று காலை, 10 மணிக்குள் வரவேண்டும்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு எப்படி ? 29ல் இலவச பயிற்சி அளிப்பு

கரூர்: பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை சார்பில், 29ந் தேதியன்று, ஒரு நாள் இலவச நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி நடக்கிறது.
இதுகுறித்து கரூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப்பேராசிரியர் செந்தில்வேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், 29ந் தேதி, புறக்கடை மற்றும் வணிக ரீதியான நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நடக்க உள்ளது.
நாட்டுக்கோழிவளர்ப்பு, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை நோய்கள், அவற்றை

தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில், களப்பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், 04324-294335 என்ற டெலிஃபோன் எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். முன்பதிவு செய்தவர்கள், 29ந் தேதி, காலை, 9.30 மணிக்கு, பயிற்சி மைய வளாகத்துக்கு வரவேண்டும்.

## மாடுகளுக்கு மலட்டுத்தன்மை சிறப்பு முகாம் நடத்த கோரிக்கை

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், அதிகப்படியான மாடுகளுக்கு மலட்டுத்தன்மை ஏற்பட்டுள்ளதால், சிறப்பு கால்நடை முகாம் நடத்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணராயபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், முறையான சிகிச்சை, பராமரிப்பின்றி இருப்பதால், பெரும்பாலான கால்நடைகளுக்கு மர்ம நோய் தாக்கியுள்ளது. இதனால், கால்நடைகள் சினை பிடிக்காமல், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கிருஷ்ணராயபுரம் விவசாயிகள் கூறியதாவது:

கிருஷ்ணராயபுரம் தாலுக்கா பகுதியில் செயல்படும், 23 பஞ்சாயத்து பகுதியிலும், கால்நடைகள் வளர்ப்பில் விவசாயிகள் பலர் ஈடுபட்டுள்ளனர். கிருஷ்ணராயபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், கால்நடைகளில் மர்ம நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. மர்ம நோயால், கால்களில் புண் ஏற்படுவதால், கால்நடைகள் சோர்ந்து போய் காணப்படுகிறது.

பசுமாடு சினை பரிசோதனை செய்யும் போது, மாடுகளுக்கு மலட்டுத்தன்மை ஏற்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால், விவசாயிகள் பலரும் அதிருப்தியில் உள்ளனர்.

கால்நடை வளர்ப்பில் தனிக்கவனம் செலுத்தி வரும் கிருஷ்ணராயபுரம் பகுதியில், அரசு கால்நடைத்துறை சார்பில், சிறப்பு முகாம் நடத்திட, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வேளாண் பண்ணை பணியாளர்களை நிரந்தரம் செய்ய கோரிக்கை

விழுப்புரம்:பண்ணைகளில் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களை, நிரந்தரம் செய்ய வேண்டும் என அரசு வேளாண்மைத் துறை பண்ணை பணியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேளாண்மைத்துறை பண்ணை பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் விழுப் புரம் ஏ.எஸ்.ஜி., மண்டபத்தில் நடந்தது.மாநில தலைவர் முருகன் தலைமை தாங்கினார். பொருளாளர் குணசேகர், மாநில செயலாளர் அய்யாவு, விழுப்புரம் மாவட்ட செயலாளர் தேவநாதன் முன்னிலை வகித்தனர். பொது செயலாளர் ஜெய்சங்கர் வரவேற்றார்.கூட்டத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பண்ணைகளிலும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும், தென்னை ஒட்டுப் பணியில் ஈடுபடும் தினக்கூலி பணியாளர்களை தொழில் நுட்பப் பணியாளர்களாக அறிவித்து, தினக் கூலியாக 250 ரூபாய் வழங்க வேண்டும்

மற்றும் அரசு விதை சுத்தகரிப்பு நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் 10 ஆண்டிற்கு மேல் பணியாற்றியவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.விழுப்புரம் மாவட்ட தலைவர் செல்வம் நன்றி கூறினார்.

**வேளாண்மை இணை இயக்குனர்ஒலக்கூர் வட்டாரத்தில் திடீர் ஆய்வு**

திண்டிவனம்:ஒலக்கூர் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் சேகர் திடீர் ஆய்வு செய்தார்.விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 3900 ஹெக்டர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறை செயல் விளக்கம் மேற்கொள்ளப்படுகிறது.மேலும், விதை பெருக்குத்திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டு வினியோகம் செய்வதற்கு தேவையான விதைகள் உற்பத்தி செய்ய 525 ஹெக் டரும், பயிர் வகையில் 600 ஹெக்டரும், எண்ணெய் வித்துக்கள் 800 ஹெக்டர் பரப்பிலும் விதைப்பண்ணை அமைக்க திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டங்களின் செயலாக்கங்களை ஒலக்கூர் வட்டாரம் கம்பூர் கிராமத்தில் வேளாண்மை இணை இயக்குனர் சேகர் திடீர் ஆய்வு செய்தார்.வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகர், துணை வேளாண்மை அலுவலர் சுருளிமணி உடனிருந்தனர்.

25th nov 2012 P.M

**கால்நடை பல்கலை மையத்திற்கானஇடத்தை துணை வேந்தர் ஆய்வு**

விழுப்புரம்:கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்திற்கான இடத்தை துணை வேந்தர் பார்வையிட்டார்.விழுப்புரம் வி.மருதூரில் கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த கட்டட வளாகத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட, தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதையொட்டி விழுப்புரம் வி.மருதூரில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரபாகரன் பார்வையிட்டார்.

ஆராய்ச்சி மையத்தின் இணை பேராசிரியர் வெங் கடபதி, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் அழகரசன், உதவி இயக் குனர் சுந்தரராசன், கால்நடை டாக்டர்கள் இளங்கோவன், ராசாசுந்தரம், புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட மேலாளர் முத்துவேலு உடனிருந்தனர்.

**தேசிய வேளாண் பயிர் காப்பீட்டில் சேரகடன் பெறா விவசாயிகளுக்கு அழைப்பு**

விழுப்புரம்:இந்தாண்டு சம்பா நெற்பயிருக்கு தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் கடன் பெறா விவசாயிகள் சேர அழைப்பு விடப்பட்டுள்ளது.விழுப்புரம் மாவட்டத்தில் பல ஆண்டுகளாக

இயற்கை சீற்றங்களால் பாதிக்கும் வேளாண் பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மூலம் நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வருகிறது.இந்தாண்டு சம்பா நெற் பயிருக்கு, இத்திட்டத்தில் பயிர்கடன் பெறா விவசாயிகள் சேருவதற்கான கடைசி தேதியாக வரும் டிச., 15ம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.சம்பா நெற்பயிர் ஒரு ஏக்கர் மொத்த மதிப்பு 8 ஆயிரத்து 692 ரூபாய்.

இதற்கு பிரிமியமாக பயிர்கடன் பெறா சிறு, குறு விவசாயிகள் சார்பில் 78 ரூபாய் செலுத்த வேண்டும்.மற்ற விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் 87 ரூபாய். பயிர்கடன் பெறா விவசாயிகள் பிரிமியத்தை செலுத்த சிட்டா, அடங்கல் அல்லது வி.ஏ.ஓ., சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் அவரவர் தாங்கள் சேமிப்பு வைத்துள்ள வங்கியில் செலுத்தி ரசீது பெறலாம்.இத்திட்டத்தில் கூடுதல் மதிப்பாக சம்பா நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 7 ஆயிரத்து 604 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு கடன் பெறா சிறு, குறு விவசாயிகள் பிரிமியமாக ஒரு ஏக்கருக்கு 465 ரூபாயும், மற்ற விவசாயிகளுக்கு 517 ரூபாயும் செலுத்த வேண்டும்.இந்த கூடுதல் மதிப்பிற்கு பிரிமியம் விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகேயுள்ள வேளாண் துறை, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியில் பெறலாம்.இத்தகவலை சென்னை அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிரவேலு தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் வேளாண் இயந்திரம் பெற அரசு 39.25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு**

விழுப்புரம்:மத்திய நிதியுதவி திட்டத்தில் விவ சாயிகள் வேளாண் இயந்திரங்கள் பெறுவதற்கு தமிழக அரசு 39.25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.விழுப்புரம் மாவட்டத்தில் இந்த நிதியாண்டு வேளாண்மை பொறியியல் துறை மூலம் மத்திய நிதியுதவி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் பெற தமிழக அரசு 39.25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.இதில் டிராக்டர், பவர் டில்லருக்கு அதிகபட்ச மானியமாக 45 ஆயிரம் ரூபாயும், ரோட்டாவேட்டருக்கு அதிகபட்ச மானியமாக 20 ஆயிரம் ரூபாயும் வேளாண் இயந்திரம் திட்ட நெறிமுறைகளுக்குட்பட்டும், நிதி ஒதுக்கீட்டிற்குட்பட்டு வழங்கப்படுகிறது.ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தனியே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இந்த திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள, விழுப்புரம் மற்றும் வானூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, வழுதரெட்டி, விழுப்புரம் அலுவலகத்தையும், திண்டிவனம் மற்றும் செஞ்சி விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், ஜெயபுரம் காலனி, திண்டிவனம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், ஏமப்பேர், கள்ளக்குறிச்சி அலுவலகத்தையும், திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், என்.ஜி.ஜி.ஓ., நகர், திருக்கோவிலூர்

அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.இத்தகவலை விழுப்புரம் வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

## மணிமுக்தா அணை பாசனத்திற்கு திறப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணை பாசன வாய்க்கால் மதகினை அமைச்சர் மோகன் நேற்று திறந்து வைத்தார்.கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணையில் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஜெ., உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து நேற்று காலை அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.நிகழ்ச்சிக்கு ஊரக தொழில்துறை அமைச்சர் மோகன் தலைமை தாங்கி, பாசன வாய்க்கால் மதகை திறந்து வைத்தார். கலெக்டர் சம்பத், எம்.எல்.ஏ., அழகுவேலுபாபு, டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் சண்முகம் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் ஆர்.டி.ஓ., ராஜசேகரன், செயற்பொறியாளர் சின்னராஜ், உதவி செயற்பொறியாளர் முரளிதரன், உதவி பொறியாளர்கள் கந்தவேல், நாராயணன், அருணகிரி, முன்னாள் எம். எல்.ஏ., ஞானமூர்த்தி, அ.தி.மு.க., நகர செயலர் பாபு, சேர்மன்கள் ராஜசேகர், அரசு, ராஜேந்திரன், நகர சேர்மன் பாலகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் மணி, ராயப்பன், அய்யப்பா, துணை சேர்மன் கண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.அணையின் மொத்த கொள்ளளவான 736 மில்லியன் கன அடியில் (36 அடி) தற்போது 412 மில்லியன் கன அடி (31 அடி) நீர்பிடிப்பு உள்ளது. அடுத்த மாதம் 9ம் தேதி வரை தொடர்ந்து 15 நாட்களுக்கு புதிய பாசனத்திற்கு 42 கன அடி, அகரக் கோட்டாலம் கிராம பாசனத்திற்கு ஒரு கன அடி, பழைய பாசனத்திற்கு 25 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்படுகிறது.அடுத்த மாதம் 9ம் தேதி முதல் 84 கன அடி புதிய பாசனத்திற்கும், 15 கன அடி பழைய பாசனத்திற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும். இதனால் 5,493 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன. இதன் மூலம் மொத்தம் 19 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைவர்.

## கரும்புக்கு ரூ.5,000 வழங்கஜனவரி 29ல் ஆர்ப்பாட்டம்

திருச்சி: "கரும்பு டன் ஒன்றுக்கு, 5,000 ரூபாய் வழங்கக்கோரி, சென்னையில் ஜனவரி, 29ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்' என, பாரதிய கிஷான் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.பாரதிய கிஷான் சங்கம் சார்பில், மாநில நிர்வாகிகள் கூட்டம் உறையூர், சாதனா மஹாலில் நேற்று நடந்தது. மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு தலைமை வகித்தார். துணைத்தலைவர் ராமமூர்த்தி, கரும்பு விவசாய பிரிவு துஜணத்தலைவர் சேகர், ஒருங்கிணைப்பாளர் பட்டாபி உள்பட பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:"யானை பசிக்கு சோளப்பொரி' போல அனைத்து பொருட்களுக்கும் அதிகபட்ச விலை அறிவிக்கும் மத்திய அரசு, விவசயிகள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு மட்டும் குறைந்தபட்ச

ஆதரவு விலையென்று, டன்னுக்கு, 1,450 ரூபாயிலிருந்து, 1,700 ரூபாய் அறிவித்து, கரும்பு விவசாயிகள் வயிற்றில் அடித்துள்ளது.இந்நிலையில், 50 கிலோ பொட்டாஷ் உரத்தை, 231 ரூபாயிலிருந்து, 900 ரூபாய்க்கும், டி.ஏ.பி., உரம், 486 ரூபாயிலிருந்து, 1,400 ரூபாய் என, உரம் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

ஒரு டன் கரும்புக்கு, 5,000 ரூபாய் வழங்க வேண்டும்.
இதை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் டிசம்பர் மாதம் மாவட்ட தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தி, ஜனவரி, 29ம் தேதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தி, 30ம் தேதி சென்னையில் கூடி, டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக முடிவு செய்வது.விவசாயத்துக்கு தனி பட்ஜெட் வேண்டும்' என தமிழக அரசை கேட்டுக்கொள்வது. விவசாய விளை பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கும் வரை, விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.பிரம்மபுத்திரா, கங்கை, யமுனை, மகாநதி, கோதாவரி ஆகிய நதிகளை காவிரியுடன் இணைத்து, தமிழகத்தையும், காவிரி டெல்டா விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும்.60 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து விவசாயம் செய்து, விவசாயம் செய்துள்ள திருச்சி, தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, கடலூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், நாமக்கல், சேலம் மாவட்ட விவசாயிகளை காப்பாற்ற மத்திய அரசு உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் சாகுபடி செய்த பயிர்கள் அழியும் வாய்ப்புள்ளது. எனவே, ஒரு லட்சத்து. 20 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டயீடாக வழங்க வேண்டும்.

## உணவு பதப்படுத்தும் திட் டம் ரூ.10 கோடி வரை மானியம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உணவு பதப்படுத்தும் திட்டத்தில் தொழில் முனைவோருக்கான நிதி மானியம் குறித்த விளக்க கூட்டம், ஈரோட்டில் நடந்தது.வேளாண் அலுவலர் சுமதி கூறியதாவது:மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு இணைந்து, 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் நிதி மானியம், மத்திய அரசு பங்காக, 75 சதவீதம், மாநில அரசு பங்காக, 25 சதவீதம் வழங்கப்படுகிறது.தொழில்நுட்ப மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் ஆகியவற்றுக்கு, கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்துக்கு, 25 சதவீதம், அதிகப்பட்சமாக, 50 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்ற வசதிகளை தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களுக்கு, கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்துக்கு, 50 சதவீதம், அதிகப்பட்சமாக பத்து கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.மனித வள மேம்பாட்டு திட்டங்களில், உணவு பதப்படுத்தும்

தொழில் நுட்பம் தொடர்பான பட்டம், பட்டயப்படிப்புக்கான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு, புத்தகங்கள், பரிசோதனை கூட கருவிகள் போன்றவற்றுக்கு அதிகப்படசமாக, 75 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்க, ஒரு பயிற்சிக்கு இரண்டு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு, ஒரு பொருள் பயிற்சி, அதிகப்பட்சமாக நான்கு லட்சம் ரூபாய் நிலையான முதலீட்டுக்கும் மற்றும் இரண்டு லட்சம் ரூபாய் சுழற்சி முதலீட்டுக்கும் வழங்கப்படுகிறது. பல பொருள் பயிற்சிக்கு அதிகப்பட்சமாக, 11 லட்சம் ரூபாய் நிலையான முதலீட்டுக்கும், நான்கு லட்சம் ரூபாய் சுழற்சி முதலீட்டுக்கும் மானியமாக வழங்கப்படுகிறது.விளம்பரம் மூலம் மேம்பாட்டு திட்டத்தில், கருத்தரங்கு மற்றும் பணிமனை கூட்டத்துக்கு திட்ட மதிப்பில், 50 சதவீதம், அதிகப்பட்சமாக மூன்று லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். படிப்பு மற்றும் கணக்கெடுப்புக்கு திட்ட மதிப்பில், 50 சதவீதம், அதிகப்பட்சமாக மூன்று லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சி திட்டத்துக்கு ஏற்றவாறு நிதி உதவி வழங்கப்படும்.இத்திட்டத்தின் கீழ் மானியம் கோருவோர், விண்ணப்பங்களை வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) மூலமாக மாநில தேசிய உணவு பதப்படுத்தும் திட்ட இயக்குனருக்கு அனுப்பலாம். மேலும் விபரங்களுக்கு வேளாண் வணிகம் துணை இயக்குனரை அணுகலாம்.
இவ்வாறு அவர் கூறினார்.முன்னதாக மாவட்ட தொழில்மைய உதவி பொறியாளர் திருமுருகன், திட்டம் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம்,வேளாண் அலுவலர் (அக்மார்க்) சீனிவாசன், அரிசி ஆலை உரிமையாளர்கள் சம்மேளன ஆலோசகர் ஜெகதீசன், ஈரோடு மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க தலைவர் ஆறுமுகம், செயலாளர் கந்தசாமி, பொருளாளர் கருப்புசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## உடுமலை பகுதியில் ரூ.50 லட்சத்தில் பால்குளிர்வு நிலையங்கள் திறப்பு

உடுமலை:உடுமலை, மடத்துக்குளம் பகுதியில், 50 லட்சம் ரூபாய் செலவில், அமைக்கப்பட்ட பால் குளிர்வு நிலையங்களை பால்வளத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
கோவையில் ஆவின் பால்பண்ணை அமைந்துள்ளது. பொள்ளாச்சி சண்முகாபுரம், சுல்தான் பேட்டை, திருப்பூர் அன்னூர் பகுதிகளில் பால் குளிர்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 600 கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிலிருந்து தினசரி இரண்டு லட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், உடுமலை, வால்பாறை பகுதிகளிலுள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.
கோவை திருப்பூர் மாவட்டத்தில், அமைந்துள்ள நான்கு பால் குளிர்வு நிலையங்கள் மட்டுமின்றி

கிராமங்களிலும் குளிர்வு நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது.
அதன்படி, இரண்டு மாவட்டங்களில், 16 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்த குளிர்வு நிலையங்கள் அமைக்கப்படுகிறது. இதில், உடுமலை பகுதியில் மானுப்பட்டியிலும், மடத்துக்குளம் பகுதியில், பாப்பான்குளம், வேடப்பட்டி பகுதியிலும் மொத்த குளிர்வு நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்றது. மானுப்பட்டி, பாப்பான்குளம் பகுதியில், தலா 25லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பால் குளிர்வு நிலையங்கள் பணி நிறைவடைந்தது.இதனையடுத்து, இந்த இரண்டு பால் குளிர்வு நிலையங்கள் திறப்பு விழா நேற்று நடந்தது. பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி, இரண்டு பால் குளிர்வு நிலையங்களையும் திறந்து வைத்தார். மடத்துக்குளம் எம்.எல்.ஏ., சண்முகவேலு, அரசு கேபிள் "டிவி' வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தனர்.
பால்வளத்துறை நிர்வாகம் டி.ஆர்.ஓ., குமாரவேல் பாண்டியன், கோவை ஆவின் பொது மேலாளர் சிராஜ், வருவாய் கோட்டாட்சியர் லதா, ஆவின் மேலாளர் பாலதண்டபாணி, தாசில்தார் சைபூதீன், ஒன்றியக்குழுத்தலைவர்கள் ராஜலட்சுமி, அண்ணாத்துரை, ஊராட்சி தலைவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.கிணத்துக்கடவு
கிணத்துக்கடவு அடுத்துள்ள கோவில்பாளையத்தில் 20.50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பால் குளிர்விப்பான் நிலையத்தை, வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன், பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி ஆகியோர் திறந்து வைத்தனர்.கோவில்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை ஒட்டி 20.50 லட்சம் ரூபாயில், பால் குளிர்விப்பான் நிலையம் கட்டப்பட்டுள்ளது. இங்கு, கோவில்பாளையம், முள்ளுப்பாடி, வலசுபாளையம், பழனிக்கவுண்டன்புதூர், குரும்பபாளையம், எஸ்.குமாரபாளையம், கோவிந்தனூர் புரவிபாளையம், கொங்கநாட்டன்புதூர், காப்பிலிபாளையம், வடக்கிபாளையம், சூலக்கல், எஸ்.மேட்டுப்பாளையம், குள்ளிசெட்டிபாளையம் உள்ளிட்ட 14 பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பில் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் ஐந்தாயிரம் லிட்டர் பாலை, இங்குள்ள குளிர்விப்பான் மூலம் குளிருட்டப்படவுள்ளது.இதற்கான திறப்பு விழா நேற்று நடந்தது. பொள்ளாச்சி எம்.பி., சுகுமார், பொள்ளாச்சி எம்.எல்.ஏ., முத்துக்கருப்பண்ணசாமி, கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் தாமரைதுரை உட்பட பலர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

26.11.2012 A.M

## தோவாளை சந்தையில் பிச்சி பூ விலை சரிவு




பூதப்பாண்டி : தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பிச்சி பூ விலை சரிந்தது. கிலோ ரூ.350க்கு விற்கப்பட்டு வந்த பிச்சி பூ நேற்று ரூ.250க்கு விற்கப்பட்டது.

கார்த்திகை மாதம் தொடங்கியது முதல் இங்கு பூக்கள் விலை உயர்ந்த வண்ணம் இருந்தது. இந்நிலையில் தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று, பிச்சி பூ மட்டும் சற்று விலை குறைந்து காணப்பட்டது. ரூ.350க்கு விற்ற பிச்சி நேற்று ரூ.250க்கு விற்பனையானது.

மல்லி கிலோ ரூ.600, சம்பங்கி ரூ.125, அரளி ரூ.75, கிரேந்தி ரூ.75, மஞ்சள் கிரேந்தி ரூ.70, வாடாமல்லி ரூ.60, கோழிபூ ரூ.40, துளசி ரூ.20 என்று விற்பனையானது. ரோஸ் பாக்கெட் ஒன்று ரூ.80க்கும், தாமரை ஒன்று ரூ.5க்கும் விற்கப்பட்டது. பனிக்காலம் என்பதால் வரும் நாட்களில் பூக்களின் உற்பத்தி குறைந்து பூக்கள் விலை அதிகரிக்க கூடும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மேட் டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு



மேட்டூர் : காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு குறைவான அளவு தண்ணீரே வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் நேற்று மாலை அணைக்கு விநாடிக்கு 400 கன அடி தண்ணீர் வந்தது. காவிரி டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடி மும்முரமாக நடந்து வருகிறது. இதனால் மேட்டூர் அணையிலிருந்து கடந்த சில வாரங்களாக விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில் டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்கு நீர் தேவை குறைந்துள்ளதால், நேற்று மதியம் 2 மணி முதல் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 53 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று மாலை 49 அடியாக குறைந்தது. நேற்று ஒரே நாளில் அணை நீர்மட்டம் 2 அடி குறைந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 17.49 டி.எம்.சி. இதனால் மழையை எதிர் பார்த்து உள்ளனர்.